**அலகு : தாக்கவீதம்**

**இவ்வாரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :**

- மெதுவான, நடுத்தரமான மற்றும் விரைவான தாக்கங்களிற்கான உதாரணங்களைத் தருவார்.
- மெதுவாக நடைபெறும் இரசாயனத் தாக்கங்களுக்கான உதாரணங்களை முன்வைக்கும்படி கேட்டறிவார்.
- 'தாக்கவீதம்' என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- தாக்க வீதத்தினைப் பாதிக்கும் காரணிகளைக் குறிப்பிடுவார்.

**மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :**

- விஞ்ஞானம் பகுதி II பாடநூலின் பக்கம் 138 ஐ வாசித்து ஒப்படை 17.1 இனைச் செய்க.
- பாடப்புத்தகத்தின் 139 ஆம் பக்கத்தினை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
  - தாக்கவீதம் என்றால் என்ன?
  - தாக்கவீதம் தீர்மானிக்கப் பயன்படும் முறைகளைக் குறிப்பிடுக
  - தாக்கவீதத்தைப் பாதிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக.
- பாடநூலின் பக்கம் 140 இல் தரப்பட்டுள்ள ஒப்படை 17.2 இனைச் செய்க.
- பாடநூலின் பக்கம் 142 இல் தரப்பட்டுள்ள ஒப்படை 17.3 இனைச் செய்க.
- மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்புட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்க.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 147 இலுள்ள பயிற்சியில் முதல் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.
- அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**ethaksalawa :** https://youtu.be/ASKwSZ48fII

**Youtube :** **https://www.youtube.com/watch?v=HxFlokI-xNo**

**கணிப்பீடு :**

01. சூழலில் நடைபெறும் இரசாயன் மாற்றங்களுக்கு உதாரணங்கள் மூன்று எழுதுக.
02. மெதுவாக நடைபெறும் தாக்கங்கள் இரண்டு குறிப்பிடுக.
03. வேகமாக நடைபெறும் தாக்கங்கள் இரண்டு குறிப்பிடுக.
04. தாக்கவீதம் என்றால் என்ன?
05. தாக்கவீதத்தைத் தீர்மானிக்கும் இரண்டு பிரதான முறைகளையும் எழுதுக.
06. தாக்கவீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிடுக.